
சித்ர புத்ர நாயனார் கதை

ஸ்ரீசித்ரகுப்த பூஜை



சித்ரா பௌர்ணமி

ஸ்ரீ சித்ரகுப்த பூஜை

எழுதியவர்

ஆர். பொன்னம்மாள்

தாஸன்

பதிப்பாளர்

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

சென்னை

Book Name : SRI CHITRAGUPTA POOJAI
Language : Tamil
Copy Right : *GIRI TRADING AGENCY PRIVATE LIMITED*
Edition : 2nd July 2005
Pages : 32
Price : **6.00**
ISBN No. : 81-7950-174-4
Book Size : Crown
Paper : Creamwove
Typesetting & Wrapper
Design by : *GIRI TRADING AGENCY PRIVATE LIMITED*

Copies can be had from our outlets

GIRI TRADING AGENCY PRIVATE LIMITED
Modi Niwas, Opp. Post Office, **MATUNGA,** Mumbai 400 019
Email Mumbai id : **giritradingagency@vsnl.com**

BRANCHES

MYLAPORE
10, Kapaleeswarar Sannadhi Street, Mylapore,
Chennai 600 004.

NANGANALLUR
8, 10th Street,
Near Raghavendra Temple,
Nanganallur, Chennai 600 061.

DOMBIVLI
Seva Dham "A" Wing,
Shripal Nagar, Rajaji Path,
Opp. Madrasi Mandir,
Dombivli (E), Thane Dist. 421 201.

GOREGAON
2, Siddhi Vinayak Apts,
Bangur Nagar, Goregaon (W),
Mumbai 400 062.

NERUL
S.I.E.S. Engineering & Computer
College Complex,Anjaneyar Temple,
Nerul, Navi Mumbai 400 706.

COIMBATORE
F6, T. M. House,
92, Thiruvenkatasamy Road,
R. S. Puram, Coimbatore 641 002.

KANCHIPURAM
5, Kamakshi Amman Sannidhi Street,
Kanchipuram 631 502.

MADURAI
15, North Tower Street,
Madurai 625 001.

SECUNDERABAD
Sri Subramanya Swami
Devalayam, Padmarao Nagar,
Skandagiri, Secunderabad 500 061.

Email Chennai id : **giritrading@vsnl.com**
Website : **www.giritrading.com**

சித்ரா பௌர்ணமி

35-1

சித்திரை மாதம் பௌர்ணமியன்று செய்யப்படுகிற பூஜை சித்திரா பௌர்ணமி பூஜை. அன்று உப்பில்லாமல் விரதமிருந்து சித்ரகுப்தபூஜை முடித்து ஒரு முறத்தில் அல்லது ஒரு தட்டில் நவதானியங்கள், பட்சண வகைகள் (முடிந்தவை), நோட்டு, புத்தகம், பேனா, உப்பு, கற்பூரம், ஊதுபத்தி, கிண்ணங்களில் நெய், பால், தயிர் இன்னும் எவையெல்லாம் முடியுமோ அவையெல்லாம் வைத்து தானம் செய்வது மிகமிக நற்பயனைத்தரும். பொங்கலும், காய்கறிகளும் (கூட்டு, பொரியல், பச்சடி, மோர்குழம்பு) முதலியவை நிவேதனம் செய்யலாம். வடை, பாயசம் இருந்தால் மிக நல்லது. விரத மிருப்பவர் பசுவின் பால், நெய், தயிர் ஆகியவை சேர்க்காம லிருப்பது நலம்.

பூஜைக்கு பிறகு, சித்ரபுத்ரன், அமராவதி கதையை படித்து, குறைந்தபட்சம் 11 பேருக்காவது இக்கதையை கூறவேண்டும். முடியாதவர்கள், இப்புத்தகத்தின் 11 பிரதிகளை விநியோகித் தால், இப்புத்தகத்தை கொடுத்தவர்களும், பெற்றுக்கொண்டவர் களும் சித்ரகுப்தனின் அருளால் வாழ்வில் எல்லா நலனும் பெற்று ஸகல சௌபாக்கியத்துடன் வாழ்வர்.

பதிப்புரை

அபாரசக்தி வாய்ந்தவரும், அனைத்து ஜீவராசிகளும் செய்யும் பாப, புண்ணியம், நல்லது - கெட்டதுகளுக்கேற்ப பலாபலன்கள் அனுபவிக்கச் செய்பவரும், எல்லோருண்டய கர்மாக்களையும் அவர்கள் அடையவேண்டிய சுப, அசுபங் களையும் மிக இரகசியமாக கண்காணிப்பவரும், கருணையுடன் யமதர்மராஜனின் அதிவிசுவாஸமுள்ள கணக்குபிள்ளையாக இருப்பவரும், பார்வதி பரமேசுவரர்களின் சித்திரபுத்திரரும், கோமாதா காமதேனுவின் புத்திரரும், இந்திரன் இந்திராணி யின் வளர்ப்பு மகனும், சித்திரை மாதம் பௌர்ணமியன்று பிறந்தவருமான சித்ரபுத்திரன்-சித்ரகுப்தனின் திவ்ய சரித்திரத் தையும் பூஜையையும் - பக்தகோடிகள் படித்து, பூஜித்துப் பயனடைய வேண்டுமென்று ப்ரார்த்தித்து, காமகோடி பீடாதி பதிகளின் ஆசியுடன் ஸமர்ப்பிக்கின்றோம். ஸர்வ பாபங் களையும் போக்கி, ஸகல ஸௌக்கியங்களையும் தரவல்லது இந்த திவ்ய சரித்திரம்.

குறிப்பு : இதில் விவரித்திருக்கும், விஷயங்களைத்தவிர ஏதேனும் அரிய விஷயங்கள் தக்க ஆதாரத்துடன் பக்தர்களி டமிருந்து கிடைக்கபெற்றால், மறுபதிப்பில் அதை சேர்ப்பதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைவோம்.

- பதிப்பகத்தார்

5-1

சித்ரபுத்ர நாயனார் கதை

பூலோகத்தை படைக்கும் முன்னர் இன்னார்க்கு இன்னபணி என்று பணிகள் வகுக்கப்பட்டன. யமனுக்கு தண்டனை கொடுக்கும் தொழில் விதிக்கப்பட்டது. ஆனால் சாட்சி வேண்டுமே என யோசித்தார் சிவபெருமான். விநாயகரை அனுப்பலாமென்றால் அப்போது தான் பாரதம் எழுதி ஓய்ந்திருந்தார். முருகன் முன்கோபக்காரன். பிரணவத்திற்குப் பொருள் தெரியவில்லை என்று பிரம்மனையே தலையில் குட்டிச் சிறையிலடைத்த தகப்பன் சுவாமியல்லவா.

கைலாஸபதி "பொற்பலகையும், வண்ணங்களும், தூரிகையும் கொண்டு வரப்பணித்தார்." அவர் கேட்டதெல்லாம் கொண்டு வந்து தந்தாள் உமாதேவி. பச்சை, நீலம், மஞ்சள், வெண்மை, சிவப்பு என ஐந்து நிறம் கொண்டு தன்னைப் போலவே ஒரு அழகிய உருவம் வரைந்தார்.

"தேவி... சித்திரம் எப்படி இருக்கிறது?" என்றார். "அழகாகத் தான் இருக்கிறது, வலதுகையில் தங்க நிற எழுத்தாணி: இடது கையில் ஓலைச்சுவடி... என்ன செய்யப் போகிறான் உங்கள் சித்திரத்துப் புத்திரன்?" என்று கேட்டாள் சக்தி.

'நம்புத்திரன்' என்று சக்தியின் வார்த்தைகளைத் திருத்தினார் ஈசன். "விநாயகரை நீ உருவாக்கினாய்! நான் தலையைக் கொய்து யானைத்தலையை பொருத்தினேன். சண்முகனை நீ சரவணப் பொய்கையில் சேர்த்தணைத்தாய். அவன் ஆறுமுகனானான். உன் அருள்பார்வை பட்டால்தான் இவனும் வெளி வருவான். இன்று ஞாயிற்றுக்கிழமை. சூரியபலம் மிகுந்த நாள். கண்பார்வை கூர்மையாயிருந்தால் தான் கணக்கெழுத முடியும். சித்திரை மாதம் சூரியன் உச்சமான சீர்பெற்ற மாதம். சித்திரை நட்சத்திரம் கன்யா ராசிக்குரியது. அதில் பிறந்தவன் கணக்கில் வல்லவனாயிருப்பான். பௌர்ணமி தாயான உனக்குரிய நாள். இதுவே நல்ல லக்னம் கூப்பிடு" என்றார்.

கருணையைக் கண்களில் தேக்கி "கண்மணியே, வா" என்றாள் அன்னை பராசக்தி. பொற்பலகையிலிருந்து வெளியே வந்த புதல்வன் உலக மாதா பிதாவாகிய பார்வதி, பரமேச்'வரர்களின் பாதங்களை பவ்யமாக பணிந்து கைகட்டி வாய்பொத்தி நின்றான்.

"சித்ர குப்தா... ஆம். அதுதான் இனி உன் பெயர். சிரஞ்சீவி யாய் ஜீவராசிகளின் பாப புண்ணிய கணக்கெழுதிக் கொண்டிரு. அன்னை வயிற்றில் கரு உதித்தவுடன் புதிதாய் ஓலைக்கட்டு போட்டுவிடு. சின்னச் சின்ன எழுத்துக்களில் சன்னமான ஓலைகளில் நீ எழுதும் பாவ புண்ணியக் கணக்கு முடிந்து விடுமானால் புண்ணியத்துக்கு புதுக்கட்டு போடலாம். பாவத்துக்கு தண்டனையை பூலோகத்திலேயே அனுபவிக் கட்டும். பூலோக நரகம் முடிந்து மேலுலக நரகம் வரட்டும்.

கைலாயம், வைகுண்டம், ஸத்யலோகம், ஸ்வர்க்க லோகம், கோலோகம் என்ற எல்லா உலகத்துக் கணக்குகளையும் தனித்தனியே எழுது. இத்தனை நாள் பாபம், இத்தனை நாள் புண்ணியம் என்று வகை வகுத்து எழுது. யார் யார் எங்கெங்கே எத்தனை நாள் கழித்துப்பிறக்க வேண்டும் என்று பிரம்மனிடம் கேட்டறிந்து குறித்துக்கொள்" என்று ஈசன் சொல்ல,

"குழந்தாய்! விநாயகசதுர்த்தி, வைகாசி விசாகம், கிருத்திகை போலவே சித்திரை மாதச் "சித்ரா பௌர்ணமி" உன் பிறந்த நாள் அன்று உன்னை சிறப்புடன் பூஜிப்பவர்களுக்கு பாபங்களிலி ருந்து விலக்களிக்கலாம். மைந்தர்களில் எங்களுக்கு ஏற்றத் தாழ்வு கிடையாது" என உமையம்மையும் ஆசீர்வதித்தாள்.

சித்ர குப்தனை அருகில் அழைத்து உச்சி முகர்ந்து விபூதி யிட்டு, வலது காதிலே சிவனும், உமையும் சித்திர குப்தா என்று பெயர் சொல்லி அழைத்தார்கள். பட்டுக்கட்டி நகைக ளெல்லாம்பூட்டி, "மற்றவர்களுக்குக் கஷ்டமாயிருக்கின்ற கணக் குகள் யாவும் உனக்கு சுலபமாய் வரும்" எனவும் ஆசீர்வதித்தனர்.

இந்திரனும், இந்திராணியும் குழந்தையில்லை என்று நெடுங் காலமாய் தவம் செய்தனர்.

கௌதமர் சாபத்தால் பூமி மலடானது, வானம் மலடானது, மரங்கள் மலடானது, செடி கொடிகளில் பூவில்லை, காயில்லை. பசுக்கள் மலடானது. அதனால் பாலில்லை. ஒரு ஊசியை உச்சியில் வைத்து, அந்த ஊசிமேல் உள்ளங்கால் வைத்து ஒற்றைக்காலால் பசுபதியை நோக்கித்தவமிருந்தான் இந்திரன். சில காலங்கள் சென்றபின், சுற்றிலும் குழிவெட்டி அக்கினி குண்டம் வளர்த்து இரண்டாயிரம் வருஷங்கள் தவமிருந்தான்.

தேவி "ஸ்வாமி! இந்திரன் அகலிகையை ஏமாற்றியது பெரும் குற்றம்தான்! ஆனாலும் அவன் உம்மை நோக்கிக் கடும் தவம் புரிகின்றானே! மன்னித்து அருளக்கூடாதா?" என்று கேட்க, நந்தியை அழைத்து இந்திரனை அவளது மனைவியுடன் அழைத்துவரச் சொன்னார்.

நந்தி இந்திரன் இந்திராணியை அழைத்து வந்தார். ஈசன் இந்திரனிடம் "என்ன வரம் வேண்டுமென்று கேட்க, இந்திரன்", ஸோமஸுந்தரப் பெருமானே! நாடே மலடாகி விட்டது. காடு பற்றி எரிகிறது! பூமி செழிக்க வேண்டும், புத்திரன் பிறக்க வேண்டும், பூக்கள் மலர வேண்டும் என வேண்டினான்.

"பூவையர் சாபம் பொல்லாதது அமரேந்திரா... அகலிகை கல்லாய் கிடக்கிறாள். அந்தப்பாவம் லேசில் விடுமா? காமதேனு வயிற்றில் பாலன் பிறப்பான். பாலன் பிறந்த பிறகு எங்குமே செழிப்பு தான்" என்று வரம் கொடுத்தனுப்பினார்.

இந்திரன் சென்ற பிறகு காமதேனுவை வரவழைத்து "இந்திரனின் கொட்டிலில் ஒரு புத்திரனை ஈன்ற பிறகு. வா..." என்றார். பசு கண்ணீரோடு நிற்க, "சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் பௌர்ணமியன்று உனக்கு மோட்சம் கிடைக்கும்" என்று வரமும் கோடுத்தார்கள்.

காமதேனு கன்றாய் மாறி இந்திரன் இந்திராணிக்குப் பின்னால் போய் செல்லமாய் முட்ட, இது ஈசனளித்த வரம் என்று புரிந்து கொண்டு அமராவதிப்பட்டணம் சென்றபின், வளர்பிறையில் வைகாசி மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை திருவாதிரை நட்சத்திரத்தில் 'மாவேந்திரி' எனப்பெயர் சூட்டினார்கள். பெயர் சூட்டு விழா தான தருமங்களோடு, வேடிக்கைகளோடு இருபது நாட்கள் கோலாகலமாய் நடந்தது.

கன்றாய் மாறிய காமதேனு மந்தைகளோடு ஓட்டுவதில்லை. தினமும் கோபூஜை செய்தாள் இந்திராணி. பசுவயிற்றில் எப்போது புத்திரன் பிறக்கும் என்று தினமும் அதன் வயிற்றைத் தடவிப் பார்ப்பாள்.

இந்திராணியின் ஏக்கத்தைக் கண்டு மீண்டும் தவம் செய்யப் புறப்பட்டான் இந்திரன். இடையில் புலித்தோல், கழுத்தில் ருத்ராட்சம்; ஒரு கையில் பிட்சாபாத்திரம்; மறுகையில் கமண்ட

லம்; மழுவாள்; (தவத்தைக் கலைப்பவரை ஓடுக்க) இந்திராணி அரணிக்கட்டையைக் கடைந்து நெருப்புண்டாக்கி மண் கலயத்தில் போட்டுக் கொடுக்க, காடு சென்று அக்கினி வளர்த்துத் தவமிருந்தான் இந்திரன். மறுபடி சக்தி சிவபெருமானைத் தூண்டிவிட நந்தியைக் கூப்பிட்டு சித்திர குப்தனை அழைத்து வரச்செய்தார் ஈசன்.

சித்திராபுத்ரன் வந்ததும் "இந்திரன் கணக்கிலே சந்தான ப்ராப்தி உண்டா?" என்று கேட்டார்.

"அதிக புண்ணியம் செய்தவர்க்கு சத்புத்திரன் பிறப்பான். அதிக பாவம் செய்தவனுக்குத் தீயபுத்திரன் பிறந்து அவமானத்தை ஏற்படுத்துவான். கடனைக் கழிக்கப் பிறக்கும் பிள்ளைகள் பெற்றோருக்கு முன்பே காலமாகி விடுவர். பாப புண்ணியம் இரண்டும் கலந்து செய்வோருக்கு கர்மவினைப்படி புத்திர யோகம் ஏற்படும். முற்பிறவியில் பெற்றோரைத் தவிக்க விட்டவர்களுக்கு பிள்ளை பாக்கியம் கிடையாது. சென்ற பிறவியில் மனைவி இருக்கச் சோரம் போனவனுக்கு பிள்ளைகள் பிறந்து பிறந்து மரிக்கும். அகலிகையை ஏமாற்றிய பாவம் தவத்தால் அழியாதது. அதனால் இந்திரன் விந்துவில் ஜீவன் இல்லை" என்றார் சித்ரகுப்தன்.

"சரி நீயே போய் இந்திரன் வளர்க்கும் பசுவின் வயிற்றில் பிறப்பாய்" என்றார் கைலயங்கிரி நாதர்.

"சுவர்க்கத்திலுள்ள சம்புப் பொய்கையில் ஒரு தாமரைப் பூவாக இரு. காமதேனு அங்கே தண்ணீர் அருந்த வரும். தாமரை மலரையும் சேர்த்துத் தின்று விடும். அதுவரை கணக்குகளை மகாவிஷ்ணுவிடம் ஒப்புவித்துவிடு" என்று உத்தரவிட்டார் மஹேசன்.

ஆயிரம் பேர் சேர்ந்தாலும் அசைக்க முடியாத சுவடிக்கட்டை திருமாலிடம் கொடுத்துவிட்டு ஒரு சிறு குறிப்பு எழுதிக் கையில் வைத்துக்கொண்டார் சித்ரகுப்தன்.

"இது என்ன ஓலை?" என்று உமை கேட்க, "தாயே! எல்லாக் கணக்கின் தலைக்குறிப்பும் இதனுள் இருக்கிறது. இதையும் எழுத்தாணியையும் நான் யாரிடமும் தரமாட்டேன்" என்று பணிவுடன் சித்ர குப்தர் மறுக்க, ஈசன் விட்டுவிடு, ஏடும்,

எழுத்தாணியும் கொண்டே பிறக்கட்டும்" என்று அனுமதி அளித்தார்.

தாமரை மலராக இருந்த சித்ராபுத்திரன் சுற்றிலும் பார்க்கின் றார். "ஆகா... இந்தப்பொய்கை எத்தனை பெரியது. அடேயப்பா... எத்தனை ஆழம்... சுற்றிலும் என்ன அழகு! என்ன மணம்! இந்த சண்பக மலர்களால் வாசனையா? அன்னக் கூட்டங்களும், வாத்துக்களும் நீந்தும் காட்சி தான் என்ன ரம்யமாய் இருக்கின் றது! பவளக் கொடிகள் என் தண்டிலே சிக்குகின்றதே! ஆ... முத்தும், பவளமும் விளையும் இடத்தில் ஜனிக்க என்ன புண்ணி யம் செய்திருக்கிறேன்! அதோ... கிழவர்கள் மூழ்கி எழுந்து குமரர்களாகி விட்டனரே! பொய்கையில் அமிர்தம் கலந்தி ருக்கிறது போலும்! அதோ பலாவும், மாவும் பிஞ்சு விட்டிருக் கிறதே! குழந்தை பிறக்கும் வேளையில் அற்புதங்கள் நிகழும் என்று ஈசன் வரம் கொடுத்திருக்கிறாரே! மல்லிகை, முல்லை, பிச்சிப்பூ, இருவாட்சி எல்லாம் மொட்டு விட்டிருக்கின்றனவே! மூன்று பக்கமும் மலையிலிருந்து சிற்றருவிகள் விழுந்து பொய்கையை நிறைக்கின்றன. ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி ஆகியவற்றின் வாசனை மலைகளிலிருந்து வரு கின்றது!" இப்படி அதிசயப்படும் வேளையில், இந்திராணி சுபக்கனவுகள் கண்டு பசுவை மேய்ச்சலுக்கு விடுகின்றாள்.

மேய்ப்பவரிடம் "ரொம்பதூரம் அடர்ந்த காட்டுக்குள் போகாதீர்கள். சிங்கம், புலி, மலைப்பாம்பு இருக்கும். சாவிப்பயிர், நாய்க்கடுகு, ஆமணக்கு, கள்ளி, எருக்கு, ஊமத்தை ஆகிய வற்றை உண்ணாமல் ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ளுங்கள்" என சொல்லி அனுப்பினாள்.

தண்ணீர் குடிக்க பொய்கைக்கு வந்தது காமதேனு. வாயுவின் பலத்தால் தண்ணீரோடு தாமரைப்பூவும் உள்ளேபோயிற்று. போனநேரம் சூல்கண்டது. வாலைச் சுழற்றி அடித்தது. வாயில் நுரைதள்ள மயங்கிப்படுத்தது. பின் எழுந்து தள்ளாடி நடந்து வந்தது. மாட்டைப்பார்த்த மங்கையர் "நச்சுப்புல்லைத் தின்றி ருக்குமோ? நாகம் தீண்டியிருக்குமோ? சிங்கம், புலி எதையாவது கண்டு மிரண்டிருக்குமோ?" என்று எண்ணி திருஷ்டி சுற்றினர். மஞ்சளைப் பூசி சந்தனம், குங்குமம் இட்டனர். கெட்டிக்கழு நீரில் தவிடும் புண்ணாக்கும் கலந்து வைத்தனர். ஒருத்தி

பச்சைப்புல் அறுத்துக்கொண்டு வந்து போட்டாள். இந்திராணி யிடம் செய்தி சொல்ல ஓடினாள் ஒருத்தி.

செய்தி கேட்ட இந்திராணி பதறிப் போய் ஓடிவந்தாள். பசு இலக்கணம் தெரிந்த மருத்துவர்களையும், அனுபவமுள்ள இடையர் தலைவர்களையும் அழைத்து வரச் சொன்னாள்.

அவர்கள் வந்து மாட்டை பரிசோதித்து "இன்றைக்கோ, நாளைக்கோ கன்று போடும் போலிருக்கிறதம்மா. ஆனால் பசு சூலானதே, தெரியவில்லையே" என்றார்கள். பஞ்சாட்சரம் ஜெபித்து தியானத்தில் ஆழ்ந்துவிட்டாள் இந்திராணி.

"பார்வதி, இந்திரன் தவத்திலிருக்கிறான். இந்திரன் செய்த பாபங்களுக்கு எந்தத் தவமும் ஈடாகாது. இந்திராணியும் தியானத் திலாழ்ந்து விட்டாள். நீ போய் ஆறுதல் சொல்லிவா" என்றார் வெள்ளியங்கிரி வாசன்.

ஈச்'வரி குறத்தி வடிவில் வந்தாள். இடுப்பிலே கூடையும், பொற்பூண் பூட்டிய பிரம்புமாக பாடிக்கொண்டு வந்தாள். பாடல் கேட்டு கண் விழித்தாள் அமராவதி. "குறத்தியைக் கூட்டிவா. குறிகேட்கலாம்" எனப்பணிப்பெண்ணை ஏவினாள். பார்வதி யான குறத்தி வந்தாள்.

"உட்காரம்மா, இந்தப்பசு இன்று காலை மேயப்போகும் வரை நன்றாக இருந்தது. அங்கே எதைத்தின்றதோ? எது கடித்ததோ... கொட்டிலில் நிற்காமல் அலைபாய்கிறது. வாலை அடித்துக் கொள்கிறது. உட்காருவதும், எழுந்திருப்பதுமாக... அதோபார்... அந்த மாதிரித்தான் கண் சொருகிக்கொள்கிறது! மாந்திரீகன் காற்று அடித்துவிட்டது என்று பூசை போடுகிறான். ஜோதிடம் கிரகம் சரியில்லை என்று பரிகாரம் சொல்கிறான். மருத்துவன் கர்ப்பம்; இன்றோ நாளையோ கன்றுபோட்டு விடும் என்று மருந்து கொடுக்கிறான். ஆனால் வயிறு புடைத்து இருக்கிறது. மாடு இறந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. பரமேஸ் வரனைத் தவிர வேறெவரும் எனக்குத்துணை இல்லை" என்று பலவாறு புலம்பினாள் இந்திராணி.

"பயப்படாதேயம்மா, நான் பார்த்துச் சொல்கிறேன். பரமசிவன் தாயுமானவராய் வந்து பிரசவம் பார்த்தவராயிற்றே! அவரை நம்பினவர்களைக் கைவிடமாட்டார்" என்றவள் பசுவைத் தலை

முதல் கால்வரைத் தடவிக் கொடுத்து, சாணியால் பிள்ளையார் பிடித்து, தேனைவிட்டு தினைமாவைப் பிசைந்து நிவேதனம் பண்ணிவிட்டு கண்ணை மூடித்தியானம் செய்துவிட்டு, "புத்திரன் வேணுமென்று தபஸிருந்ததால், பரமசிவன் அரு ளால் பசு வயிற்றில் புத்திரன் பிறக்கப் போகிறான். கையிலே பொன்னேடும், எழுத்தாணியும், கொண்டு பிறக்கப்போகிறான். பொற்குண்டலமும் பூணூலும் போட்டிருப்பான். சித்திரைமாதம் சித்திரை நட்சத்திரம், ஞாயிற்றுக்கிழமை, பௌர்ணமி அன்று குழந்தை பிறக்கவில்லையென்றால் நான் குறி சொல்லும் கோலை இனி எடுக்கமாட்டேன். கருவூலம் அவன் கையிலிருப் பதால் பதினான்கு லோகக் கணக்குக் குறிப்பையும் தாங்க மாட்டாத பசுதவிக்கிறது; தள்ளாடுகிறது. என்பேர் முத்தாலம்மா; நிறைநாழிமுத்து அளந்து கொடு; நான் உத்தரவு வாங்கிக் கிறேன்" என்று கேட்கவும், இந்திராணி ஈச்'வரியின் கூடையில் நிறைநாழி முத்து அளந்து போட்டாள்.

குறத்தியாய் வந்த பார்வதி சென்றபிறகு மாட்டுப் பிரசவம் பார்ப்பவர்கள், மனிதப் பிரசவம் பார்ப்பவர்கள் இருவரையும் அழைத்தாள் இந்திராணி. பசுவை விஸ்தாரமான மண்டபத் துக்குக் கொண்டுவரச் செய்து நான்கு பக்கமும் மறைப்புக் கட்டினார்கள். கருப்பட்டி கலந்த கழுநீரில் பருத்திக் கொட்டை அரைத்து வைத்தாள்.

இந்த அதிசயத்தைப் பார்க்க தேவர்களும், ரிஷிகளும், அந்தணர்களும் ஆகாயத்தில் கூடியிருந்தனர். முகூர்த்தம் பார்த்து ஜாதகம் எழுத முனிசிரேஷ்டர்கள் காத்திருந்தனர். தானம் வாங்க வென்று ஒரு கூட்டம் காத்திருந்தது.

குறத்தியாய் வந்த ஈச்'வரி குறித்த நாழிகையில் குழந்தை பிறந்தது. மாட்டின் குளம்பு பட்டுவிடக் கூடாதென்று தங்கத் தாம்பாளத்தில் குழந்தையை ஏந்தினர். எங்கும் வாத்திய கோஷங்கள். தவமிருக்கும் இந்திரனுக்குச் செய்தி சொல்லி அனுப்பினாள் இந்திராணி.

தொப்புள்கொடி அறுத்து, சோணை எடுத்து குழந்தையை நீராட்டி பட்டுத்துணியில் போட்டார்கள். இந்திரன் விரைந்து

வந்து குழந்தையைப் பார்த்து உச்சி முகர்ந்து, உள்ளங்கால் கண்ணில் வைத்து ஈச்'வரப்பிரசாதம் என அகமகிழ்ந்தான்.

எல்லாமே சித்திரையானதால் சித்திராபுத்திரனென்று பெயர் சூட்டினார்கள். ஏராளமான தான தர்மங்களும் செய்தனர். அன்னக் கொடி கட்டி, அன்னதானம் செய்தான் இந்திரன். நாடெல்லாம் மழை பெய்து செழித்தது. 'பாலன் வாழ்க" என அனைவரும் குலவையிட்டனர்.

குழந்தைக்குப் பசிக்கும்போது பசுவின்மடி அருகே தாதியர் கொண்டு சென்று பால் குடிக்கச்செய்வர். அவ்வேளை பசு அன்போடு நக்கிக் கொடுக்கும். இந்திராணி அருகிலிருந்து கண்காணிப்பாள். ஒரு நாள் பாலன் பால் குடிக்கையில் பசுகாலை உதற, குழந்தை முகத்தில் கால்பட்டு அலற, இந்திராணி கோபமுற்று அருகிலிருந்த தடியால் பசுவை அடித்துவிட்டாள்.

குழந்தையை உள்ளே தூக்கி வந்து சமாதானப்படுத்த முனைந்தனரே தவிர பசுவை எவரும் கவனிக்கவில்லை.

பசு கண்ணீர் பெருக "சிவபெருமானே! குழந்தை என்ற பாசம் எனக்கில்லையா? புல்லிலிருந்து வந்து என் முழங்காலில் ஊர்ந்த புழு குழந்தையைத் தாங்கியிருந்த இளம்பச்சைப் பட்டுத் துணிக்கு தாவ இருந்தது. காலை உதறினேன். எனக்கு வாயா இருக்கிறது. இதை எடுத்துச் சொல்ல, சொன்னபடி இனி என்னை அழைத்துக் கொள்ளும்" என வேண்டியது.

அடுத்த நிமிடம் சப்தமில்லாமல் அங்கே தேவலோக விமானம் வந்திறங்க காமதேனு அதில் ஏறிக்கொண்டு தேவலோகம் போய் சேர்ந்தது. குழந்தை சமாதானமுற்று உறங்க, தொட்டிலிலிட்டு இந்திராணி தாலாட்டு பாடுகின்றாள்.

1. "இந்திரனார் செல்வங்கள் ஈடேற்ற வந்தவனே!
   வானுலகம் ஆள வந்து பிறந்தவனே!
   மைந்தனாய் வந்து மகவாசை தீர்த்தவனே!
   எங்கள் குறை தீர்த்த இளம்பிறையே கண்வளராய்!

2. மண்ணின் கணக்கை மகிழ்ந்தெழுத வந்தவனோ!
   விண்ணுலக கணக்கையும் விரைந்தெழுத வந்தாயோ!

முற்கணக்கும் பிற்கணக்கும் முன்னேட்டனுப்படியும்
துஷ்டர் கணக்கும், துரோகியர்கள் தன்கணக்கும்

3. சிஷ்டர் கணக்கும் தெரிந்ததெழுத வந்தவனே!
எங்கள் குலம் வாழ எழுந்தருளும் நாயகமோ!
தேவேந்திரன் தவத்தால் சிறிய உயிரும் செய்யும்
நன்மைகளும் தீமைகளும் நன்றறிய வந்தவனோ!

4. சீராய் சிவலோகம் சேருகின்ற புண்ணியரை,
ஆராய்ந்து சொல்ல அறிவுடனே வந்தவனோ!
ஆவின் வயிற்றில் அவதரித்து பாலகனோ!
எங்கள் அரும் பொருளோ! இந்திரனார் கண்மணியோ!

5. இந்த நல்ல தொட்டிலிலே என்மகனே நித்திரைபோ!
ஆதிசிவன் அருளால் அவதரித்த மாணிக்கமே!
ஏடெடுத்து வந்தவனே! எழுத்தாணி பிடித்தவனே!
சித்திரையின் புத்திரனே! சிறப்புடனே கண்வளராய்!

குழந்தை நன்றாகத்தூங்கி எழுந்து விளையாடியபின் பசியால் அழுதபோது தான் மாட்டைத் தேடினார்கள். மாட்டைக்காணோம் என்ற செய்தி கேட்ட இந்திராணி ஊரெங்கும் தேடச்சொல்லி சலித்துப் போனாள்.

குழந்தை கைவிடாமல் கதறுகின்றது. பிள்ளை பெற்ற மங்கையரெல்லாம் பால் கொடுக்க முன்வந்தார்கள். குழந்தை திமிறிக் கொண்டு அலறியது. பின்னர் வேறொரு பசுவின் பாலை வலுக்கட்டாயமாகப் புகட்டி சமாதானம் செய்தனர். 'மாயையாய் வந்த பசு பாலகனை ஈன்றுவிட்டு மாயமாய் போய்விட்டது' என்று யாவரும் பேசிக் கொண்டார்கள்.

சித்திரா புத்திரன் முகம்பார்த்து சிரித்தான்; நீந்தினால் நெஞ்சுதேயுதென்று ஓடிப்போய் எடுப்பாள் இந்திராணி. தவழ்ந்தால், இந்திராணி பார்த்தால் முட்டிக்கால் தேயுமென்று கோபிப்பாள் என்று தாதியர் தாவிச் சென்று தூக்குவர். உட்கார்ந்தான், நின்றான்; தளர்நடை பயின்றான். ஓடி விளையாடினான். இந்திரனும் சசிதேவியும் மகிழ்ந்தனர். குழந்தைக்கு ஐந்து வயதாயிற்று. உபாத்தியாரை அழைத்து வித்யாப்பியாஸம் செய்தனர்.

மணல் பிஞ்சுக்கையை உறுத்துமென்று தவிட்டைக் கொட்டச் செய்தாள் இந்திராணி. 'ஹரி...ஓம்...' என்று ஆசிரியர் சொல்ல, சித்திரா புத்திரன் அவரை உற்றுப் பார்த்து, "நீங்கள், அருமையான மனைவி இருக்க, அவளை ஏமாற்றிவிட்டு செட்டிமார் தெருவில் ஒருபெண்ணை சேர்த்துக் கொண்டீர்களே! இது நியாயமா?" என கேட்க ஆசிரியர் பேந்தப்பேந்த விழித்துக் கொண்டு "அப்புறம் வருகிறேன். அவசரஜோலி யொன்றிருக் கிறது" என்று போய்விட்டார். விசாரித்ததில் அது நிஜம்தான் என்று தெரிய வந்தது.

அது முதல் சித்ராபுத்ரன் பக்கத்தில் அணுகவே எவரும் அஞ்சினர். வேலைக்காரி, வண்ணான், நாவிதன் எல்லோர் குட்டையும் அம்பலப்படுத்தினான் சித்ராபுத்திரன்.

பாடம் சொல்லிக் கொடுக்க எவரும் முன்வரவில்லை. பழைய ஆசிரியர் எங்கு போனார் என்றே தெரியவில்லை.

"எது களவாடினாலும் எண்ணையைக் களவாடக் கூடாது" என்றான் ஒருநாள். தூக்கோடு எண்ணையைக் கீழே விட்டு விட்டாள் தாதிப்பெண். அது முதல் மைந்தனுக்கு இந்திராணியே எண்ணை தேய்த்து நீராட்டும் படி ஆயிற்று.

சித்ராபுத்திரன் வளர வளர தொல்லைகளும் வளர்ந்தன. உன்னோடு பெரிய தொல்லையாய் போயிற்று' என பெற்றவர் கடிந்து கொண்டனர்.

"அம்மா, என் பணிகணக்கெழுதுவது. ஈஸ்வரன் எனக்களித்த வரப்பிரசாதம் ஞாபக சக்தி, வேகமாய், விட்டுப் போகாமல் கணக் கெழுதும் திறன். என்னை விட்டு விட்டால் நான் போய் கணக் கெழுதுவேன் என வேண்ட, பெற்றோர் பிரியா விடை கொடுத்தனர்.

கைலாயம் அடைந்தான் சித்ரகுப்தன். பார்வதி பரமேச்'வர ரைப் பணிந்தான். காமதேனுவை அழைத்து "உன் பிள்ளையைப் பார்த்தாயா?" என்று கேட்டார் ஈசன். காமதேனு சித்ராபுத்ரனை நக்கிக் கொடுத்தது. முகத்தை உரசியது.

ஈசன் "சித்ரபுத்ரா... பூலோகத்தை சுற்றிவா... யமதர்மனோடு சேர்ந்து பாவங்களுக்கான நரகங்களை ஏற்படுத்து என்று கூறி ஆசி வழங்கினார்.

சித்ரகுப்தன் சென்றபிறகு தேவேந்திரன் வந்தான். "பிள்ளை வரம் கேட்டால் பிரசினையைப் பிள்ளையாகத் தந்து விட்டீர் களே" என்றான் இந்திரன்.

"நீ எத்தனை பேர்களுக்குப் பிரச்சினையாய் இருந்திருக் கிறாய்? ஒரு பிரச்சினைக்கே இப்படி துக்கப்படுகிறாயே... போ, போ" என்று கடிந்து கொண்டார்.

யமதருமனும், சித்ரபுத்ரனும் கலந்து பேசினர். மயனும், விசுவகர்மாவும் அவர்கள் சொன்னபடியெல்லாம் முள்ளாலான காடுகள், சரளைக் கற்களாலான படுக்கைகள், தரைகள், இரும்புச் செக்குகள், இரும்புத் தூண்கள், செப்புத்தூண்கள், அடியிலே குழிவெட்டி, தணலிட்டு அதன் மேல் இரும்பு முக்காலிகள், விதவிதமான கிடுக்கிகள், தொறட்டிகள், கொறடாக்கள், சகதிக்குழிகள், மேலே நூற்பாலங்கள், அட்டைக் குழிகள், கிருமிக்குழிகள் எனப்பலவிதமான நரகங்களை அமைத்துக் கொடுத்தனர்.

"பெற்றவர்களைப் பேணாத பாவியர்க்கு அட்டைக்குழி; பொய்வழக்கு ஜோடித்தவர்களுக்கு கொறடாவால் நாக்கைப் பிடுங்க வேண்டும். பணத்துக்காக பொய் சாட்சி சொல்வோரை அரணைக் குழியில் தள்ளவேண்டும். கன்றுக்குப் பால்விடாமல் ஒட்டக் கறப்பவர்களை இந்த இரும்பு முக்காலியில் கட்டிப்போட வேண்டும். அனல் தகிக்கும் போதுதான் பசுவின் தாபமும், கன்றின் தவிப்பும் புரியும். மனைவிக்கு, கணவனுக்கு துரோகம் செய்பவரை இந்தப் பழுக்கக் காய்ச்சிய இரும்பு, செப்புத் தூண்களில் கட்டிப் போட வேண்டும். தவறான எடை போட்டு சாமான் விற்றவரை நூற்பாலம் கடந்து வரும்போது அறுத்து சகதிக் குழிக்குள் தள்ள வேண்டும். ஊரார் உடமையை மோசம் செய்தவர்களை முள்ளுவனத்தில் நடக்கவிட்டு ஆணிப்படுக் கையில் கட்டிப்போட வேண்டும். கொலை செய்வோரை கண் களைப் பிடுங்கி அனற்குழியில் தள்ள வேண்டும். கொள்ளை யடிப்போரை மாறுகால், மாறுகை வாங்கி சரளைச்சாலையில் தள்ளிவிட வேண்டும். பிறரைப் பற்றி கோள் சொல்வோரின் காதில் ஈயத்தைக்காய்ச்சி ஊற்ற வேண்டும். தவறான வதந்தி பரப்புவோரை பாம்புக் குழியில் தள்ள வேண்டும். வேண்டிய செல்வத்தை ஏழைப்படுபவர்க்கு உதவாமல் பூட்டி வைப்

போரை, உடலிலே ஊசிகளால் புண்ணாக்கி உப்புக் கரைத்த குளத்தில் தள்ள வேண்டும். ஆட்சியில் இருப்பவர்கள் செய்யும் தவறுகளுக்கு கொதிக்கும் சுண்ணாம்புக் காளவாயில் தள்ளப் படவேண்டும். இப்படி பலவாறாக பாவங்களுக்கு தண்டனை களையும், புண்ணியங் களுக்குத் தக்கபடி சுவர்க்க போகங்க ளையும் குறித்துக் கொண்டார் சித்திராபுத்ரன்.

மார்க்கண்டேயருக்காக பாசக்கயிறு வீச, அது லிங்கத்தையும் பற்றி இழுக்க சிவனால் உதைபட்டு பாதாளம் போய் வீழ்ந்தான் யமன். மரணம் ஏற்படாததால் பாரம் தாங்கமாட்டாமல் பூமா தேவி படைப்புத் தொழிலை நிறுத்தும்படி, பிரம்மனிடம் வேண்ட, பிரும்மா தேவர்களுடன் மகா விஷ்ணுவிடம் சென்று பிரார்த்திக்க, விஷ்ணு, எல்லோருடனும் கைலாயம் சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவன் யமனை உயிர்பித்து, சித்ரகுப்தனிடம், "கொடுத்த ஆயுள் வளரும்படி கணக்கை மாற்றிக்கொள்" என்றார்.

அன்னதானம் செய்தவர்கள், ஆலயம் எழுப்பியவர், அதற்கு காரணமாக இருந்தவர், கருணை மிக்கவர், கன்றுக்குப் பால் விட்டோர், இறைத்தொண்டு செய்வோர், நல்லெண்ணம், நன்னடத்தை உடையோர், மாதா பிதாவை மகிழ்ச்சியோடு காப்பாற்றுபவர்கள், ஆலயத்தொண்டு அனுதினமும் செய்பவர் கள், பத்தினிதனை விட்டு பரத்தை இல்லாம் நாடாதார், விபூதி, ருத்ராட்சம், துளசிமாலை அணிந்தவர்கள், பிறர் பொருளைக் கண்டு பாம்பென்று பயந்து ஒதுங்குவோர், கடமை முடிப்பவர், பிதுர்க்கள் காட்டிய பாதையைக் கடைபிடித்து அனுசரிக்கும் மானிடர்கள் இவர்களின் ஆயுளைக் கூட்டிக் கொள்ளுங்கள்.

"இவர்களை பூவுலகக் கடமை முடிந்தபிறகு தேவலோகத் திற்கு அழைத்து வாருங்கள் என்று கூறி அனைவருக்கும் ஆசி கூறினார்." யமன் உமா மகேச்'வரரை, லக்ஷ்மி நாராயணரை, ஸ்ரீ வித்யா ரூபிணியான ஸரஸ்வதியுடன் கூடிய பிரம்மனையும் வணங்கி பணிவுடன், சித்ர குப்தனோடு யமலோகம் வந்து தன் கடமையைச் சீராக செய்ய ஆரம்பித்தான்.

வடக்கு வாசலில் தண்ணீர் பந்தல்... தாகமென்று வந்தவர்க்கு தண்ணீர் கொடுத்தவர்க்கு, குளம் வெட்டியவர்களுக்கு, பூமியில் (மண்) மல, ஜலம், வாய் கொப்பளித்தல் போன்ற அசுத்தங்கள்

செய்யாதவர்களுக்கு நதிகளை, நீர்நிலைகளைப் புனிதமாய் கருதியவர்களுக்கு ஆலயங்களில் பக்தியுடன் அபிஷேகநீர் கொணர்ந்தவருக்கு அந்த வாசல் வழியே வந்து தண்ணீர் சாப்பிட்டு இளைப்பாறிச் செல்ல அனுமதியுண்டு. அதற்கு கைலாசவாயில் எனப் பெயர்.

ஏகாதசி விரதமிருந்தவர், திருமாலை தினம் துதித்து வணங்கியவர், கோவில்களைப் பெருக்கி, மெழுகி, நீர்தெளித்து கோலமிட்டோர், கங்கை போன்ற புண்ணிய நதியில் நீராடியவர், துளசியும், பூஞ்செடிகளும் வைத்து தினமும் பூக்கட்டிச் சாற்றியவர்களுக்கு கிழக்கு வாசல். அதற்கு வைகுண்ட வாசல் என்று பெயர். தீபங்களும், வாசனைகளும், கலை அழகுகளும் கண்ணையும், மனதையும் கவரச் செய்யும்.

மேற்கு வாசலும், தெற்கு வாசலும் நரகத்துக்குச் செல்பவை. மாளிகையின் நடுவில் சித்திராபுத்திரன் அமர்ந்து பட்டோலை வாசித்து ஆத்மாக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்.

அதலம், விதலம், ஸுதலம், தலாதலம், ரஸாதலம், மஹா தலம், பாதாள லோகம் என்ற லோகங்களுக்கு ஆத்மாக்கள் செய்த புண்ணியங்களின் தரத்திற்கேற்ப அனுப்புகிறார்.

தாமிஸ்ரம், ரௌரவம், மகாரௌரவம், கும்பீபாகம், காலசூஸ் திரம், அசிபத்திரம், பன்றிமுகம், அந்தகூபம், கிருமிபோஜனம், அக்கினி குண்டம், வஜ்ர கண்டகம், சான்மலி, வைதரணி, பூயோ தம், பிராண ரோதம், விசஸ்னம், லாலாபக்ஷம், சாரமேயாதனம், அவீசி, பரிபாதனம், க்ஷாரகர்த்தமம், ரக்ஷோக்னம், சூலப்ரோதம், தந்தசூகம், வடாரோதம், பர்யா வர்த்தனகம், சூசி முகம் என்ற பற்பல நரகங்களுக்கு ஆத்மாக்கள் செய்த பாபக்கணக்கைப் படித்து மேற்கு, தெற்கு வாசல் வழியாக யமகிங்கரர்களால் கொண்டு செல்லப்படுகின்றனர்.

“முதலில் பாப பலனை அனுபவிக்கிறாயா? புண்ணியபலனை அனுபவிக்கிறாயா?” என்ற கேள்வி ஏறத்தாழ பாபபுண்ணியங்கள் சமமாக இருக்கும் ஆத்மாக்களிடம் கேட்டு அவர்கள் விருப்பப்படி அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

பாபம் சிறிதளவு செய்தவர்களுக்கு பகவானால் கணக்கு பரிசீலிக்கப்பட்டு ‘மறுபிறவியில் அனுபவித்துக்கொள்ளட்டும்’

என்ற சலுகை தரப்படுகிறது. புண்ணியம் கொஞ்சமே செய்திருப்பவர்களுக்கும் அதே போன்று தான் பகவான் கட்டளையிடுகிறார்.

பாப புண்ணிய பலன்களை அனுபவித்தபின் உயிர்களுக்கு செய்த நன்மை தீமைகளுக்கொப்ப மறுபிறவி தரப்படுகிறது.

இந்தப் புண்ணிய சித்திரா பௌர்ணமி தினத்தில் சித்திரா புத்திர பூஜைசெய்த பிறகு இக்கதையை பயபக்தியுடனும் சிரத்தையுடனும் படிப்பவர்களுக்கு சித்திரா புத்திரன் கருணை காட்டுகிறார். எப்படி? காய் நறுக்கும்போது கொல்லப்படும் புழுக்கள், காலடியில் சாகும் எறும்பு முதலான ஜீவராசிகள், வாழை இலையை மரத்தினின்றே நடுவில் நறுக்குதல் இப்படிப்பட்ட சின்னச் சின்னத் தவறுகளை கணக்குகளில் பதிப்பிப்பதில்லை.

அமராவதி என்னும் புண்ணியவதி எத்தனையோ தான தருமங்கள் செய்திருப்பினும் சித்திராபுத்திர நோன்பு நோற்க வில்லை. சித்திரா புத்திரனிடம் வரம் வாங்கி பூலோகம் வந்து சித்திரபுத்திர விரதம் இருந்து, பூஜை முடித்து தானதர்மங்கள் செய்து மீண்டும் சுவர்க்க லோகம் அடைந்தாள்.

இந்த சரித்திரத்தைப் படித்தவரும், கேட்டவரும், படிப்பிக்கச் செய்தவரும் பூலோகத்தில் தீர்க்காயுளுடன், ஸகல ஸௌபாக் கியங்களுடன் வாழ்வார். பெண்கள் தீர்க்க சுமங்கலியாய், நோய் நொடியின்றி, புத்ரபௌத்ராதிகளுடன், பதினாறு பேறுகளும் பெற்று சீருடனும் சிறப்புடனும் வாழ்வார்கள்.

"சொர்க்கமா? நரகமா?"

படிப்பு வரவில்லை; முரட்டுத்தனமும், கோபமும் அதிகம் எல்லோரிடமும் சண்டை; தாய் கவலைப்பட்டாள்.

"சித்ர குப்தா.... இவன் கணக்கை நீ எழுதி முடித்து புது ஓலைக்கட்டுப் போடுவாயோ.... இல்லை... இங்கேயே நரகம் ஆரம்பித்து விடுமோ" என்று தினமும் புலம்புவாள்.

மகன் காரணம் கேட்டான்.

"சித்ர குப்தாய நம:" என்று தினம் சொல்லிக் கொண்டு வா.... சித்ர குப்தன் உனக்கு நல்லவழி காண்பிப்பார்" என்றாள். தினமும் அதேபோல் சொல்லி வந்தான்.

சிறுவன் பெரியவனானான்.

அவன் வயதோடு கெட்ட பழக்கங்களும் வளர்ந்தன. ஆனால் 'சித்ர குப்தாய நம:" என்று சொல்லுவதை நிறுத்தவில்லை! தாயின் போதனை யாயிற்றே!

சித்ரகுப்தன் யோசித்தான். உலகில் சிவன், விஷ்ணு, பிரம்மன், இந்திரன், சக்தி, முருகன், விநாயகர் இப்படி ஏராளமான தெய்வங்கள் இருக்க, விடாமல் நம் பெயரைத் தினமும் உச்சரிக்கிறானே இவன்! வருஷத்திற்கு 365 வீதம் பத்து வயதிலிருந்து சொல்கிறான். தற்போது இவனுக்கு 52 வயதா கிறது. இதுவரை 15,000 நாமாவளிக்கு மேல் சொல்லிவிட்டான். இவனது ஏட்டைப் புரட்டுவோம்" என்று ஏட்டுச் சுவடியைப் படித்தவர் திடுக்கிட்டார்.

அவனுக்கு ஒரு வாரத்தில் மரணம் என்றிருந்தது அவனது கனவில் போய், "அப்பனே, நீ செய்யாத பாவம் இல்லை... உன் ஆயுள் முடிய ஏழு நாட்களே உள்ளன. தினமும் என் நாமாவை மட்டுமே உச்சரித்து வந்த உன்னை நரக சிட்சை அனுபவிக்கச் செய்ய எனக்கு வேதனையாக இருக்கிறது. உன் *மூதாதையர் உனக்களித்த நிலத்தில் ஒரு குளம் வெட்டு... ஆழமாக நீர் ஊறும்படியாக இரவும், பகலும் வேலை செய்தாவது குளத்தை வெட்டி மூடி ஒரு மாடு நீர் அருந்தினால் $3^{3/4}$ நாழிகை ஸ்வர்க்கவாஸம் உண்டு. பசுவின் உடம்பில் முப்பத்து முக்கோடி

தேவதைகளும் வாஸம் செய்கின்றனர். நிறைய மாடுகள் தண்ணீர் குடித்தால் உனக்கு சொர்க்கவாஸம் நிரந்தரமாக கிடைக்கும்".

"முதலில் சொர்க்க வாஸம் அனுபவிக்கிறாயா? நரக வாஸம் அனுபவிக்கிறாயா?" என்று யமன் கேட்பார். "முதலில் சொர்க்கம்" என்று சொல்லி விடு என்றார்.

முரடன் எழுந்தான். சித்ரகுப்தர் கனவில் கூறியபடி ஏராளமான ஆட்களை வைத்து நிலத்தின் நடுவில் குளம் வெட்டினான். இரவு பகல் ஏராளமான ஆட்கள் வேலை செய்தும் குளத்தில் பொட்டு தண்ணீர் வரவில்லை... எல்லாம் பாபவினை! நாட்கள் ஆறு முடிந்து விட்டதே! ஏழாவது நாள். ஓர் ஓரத்தில் மிக மெல் லிய ஊற்று சுரந்தது. முரடன் மகிழ்ந்தான் மாடு வர வேண் டுமே....? சித்ர குப்தன் மாடாக வந்தார். குளக்கரையில் நின்று 'ம்மா' என்று குரல் கொடுத்தார். இந்த 'ம்மா'வுக்கு "இங்கே நீர் இருக்கிறது வாருங்கள்" என்று பொருள். மாடுகள் ஓடி வந்தன. ஒரு மாடு தண்ணீர் குடித்தது.

அதே சமயம் 'நெஞ்சுவலி" என்று சாய்ந்த குளம் வெட்டியின் உயிரும் பிரிந்தது. யம பட்டணம் யமதர்மன் முன் குளம் வெட்டி நிறுத்தப்பட்டிருக்கிறான்.

"சித்ர குப்தா! இந்த ஆத்மாவின் பாப புண்ணிய கணக்கைச் சொல்லு" என்றார் யமதருமன்.

சித்ர குப்தன் ஏடுகளைப் புரட்டிவிட்டு "இவன் பெரும் துராத்மா.... ஒரே ஒரு புண்ணிய காரியம் மட்டும் செய்திருக்கி றான். ஜீவன் பிரியுமுன் ஒரு குளம் வெட்டி இருக்கிறான் ஒரே ஒரு மாடு அதில் தண்ணீர் குடித்திருக்கிறது" என்று உதட்டைப் பிதுக்கினான் சித்ரகுப்தன்".

"$3^{3/4}$ நாழிகை உனக்கு ஸ்வர்க்க வாஸம் உண்டு. முதலில் சொர்க்கவாஸம் அனுபவிக்கிறாயா? நரக வாசமா?" என்று கேட்டார் யமன்.

"முதலில் சொர்க்க வாஸமே அனுபவிக்கிறேன்" என்றான் முரடன். உடனே அவன் சொர்க்கத்திற்கனுப்பப்பட்டான். தின மும் அங்கே பூலோகத்தில் தண்ணீர் ஊற ஊற மாடுகள் வந்து நீர் குடிக்கலாயின. முரடனின் புண்ணியக் கணக்கும் ஏறிக்

கொண்டே இருந்தது. சொர்க்கத்திலேயே சுகமாக இருக்கலானான். எல்லாம் எதனால்? சித்ரகுப்தரின் அருளினால்! அவர் மட்டும் கனவில் வந்து உபாயம் சொல்லித் தந்திராவிட்டால் முரடன் எத்தகைய கொடூரமான நரக வேதனையை அனுபவித்திருப்பான்! சித்திர குப்தன் தான் வந்ததின் காரணம் அவரையே நம்பி நாமம் உரு விட்டதால் தானே.

எவரும் முறைப்படி ஒரு கடவுளையாவது பூர்ணமாக நம்பி வழிபட்டு வந்தால் சித்ர குப்தர் அருளும் கட்டாயம் கிடைக்கும்.

சித்ர குப்தனுக்கு காஞ்சிபுரத்தில் தனிக்கோயிலே இருக்கிறது. இந்திரன் சித்ரா பௌர்ணமி அன்று அங்கு வந்து பூஜை செய்வதாக ஐதீகம்.

அங்கு சித்ரகுப்தனுக்கு சித்ரா பௌர்ணமி அன்று காலையில் மஹா அபிஷேகமும், மாலையில் திருக்கல்யாணமும் நடைபெறுகிறது. சித்ரகுப்தனின் மனைவி பெயர் ஸ்ரீகாணாம்பிணி தேவி.

சித்ர குப்தனின் அதிதேவதை ப்ரம்மா. சித்ரகுப்தனின் பிரதான தேவதை கேது சித்ரகுப்தனை பூஜிப்ப தால் கேதுவின் உபாதைகளிலிருந்தும் விடுபடலாம்.

நாமும் முறைப்படி சித்ரபுத்ர விரதம் இருந்தால் அவரின் எல்லையில்லா கருணைக்குப் பாத்திரமாவோம்.

சித்ரா பௌர்ணமி அன்று ஜோதி தரிசனம்

எரித்தவன் முப்புரம் எரியில் மூழ்க
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவன் உறைவு இடம் திருவல்லமே

என திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற திருவல்லத்திலிருந்து கிழக்கே மூன்று கி.மீட்டர் தூரத்தில் உள்ளது கஞ்சன்மலை.

சுயம்புலிங்கமான வில்வநாதீஸ்வரருக்கு அங்கிருந்து தான் அபிஷேக தீர்த்தம் கொண்டு வருவார்கள். கஞ்சன் என்ற அரக்கன் இதைத் தடுத்தான். பக்தர்கள் பரமசிவனை வேண்ட பரமேச்'வரர் நந்தியை அனுப்பினார். நந்திக்கும், கஞ்சனுக்கும் கடும் போர் நடந்தது. கஞ்சனை துண்டு துண்டாக பிய்த்தெறிந்தார் சினம் கொண்ட நந்தி.

கஞ்சனின் லலாடம் விழுந்த இடம் லாலாப்பேட்டை ஆயிற்று. மார்பு விழுந்த இடம் மருதம்பாக்கம் எனவும், மணிக்கட்டு விழுந்த இடம் மணியம்பட்டு எனவும், வலது கால் விழுந்த இடம் வடகால் எனவும், இடதுகால் விழுந்த இடம் தென்கால் எனவும், குடல் பகுதிகள் விழுந்த இடம் குகைநல்லூர் எனவும், நரம்புகள் விழுந்த இடம் நரசிங்கபுரம் எனவும் பெயர் பெற்றது. இரத்ததுளிகளெல்லாம் சிவலிங்கமாக மாற அவைகளை அங்கு பிரதிஷ்டை செய்கிறார் நந்திகேஸ்வரர். கஞ்சன் பெரிய சிவபக்தன். சிவனை நினைத்து பலகாலம் கடும் தவமிருந்து வரங்கள் பெற்றவன்.

'பகவானே! இப்படியாகி விட்டதே' என கஞ்சாசுரன் வருந்த, "ஈசன், "கஞ்சா! வருந்தாதே உன்னை பூதகணங்களில் ஒருவனாக்குகிறேன்" என்று காட்சி கொடுத்தார்.

அந்த நாள் சித்ரா பௌர்ணமி.

ஒவ்வொரு பௌர்ணமிக்கும் நந்தியெம்பெருமான் ஸ்தாபித்த லிங்கங்களுக்கு பக்தர்கள் அபிஷேக ஆராதனை அன்னதானம்

எல்லாம் செய்கிறார்கள். அதிலும் சித்ரா பௌர்ணமியன்று இரவு பல்லாயிரக் கணக்கான பக்தர்கள்கூடி சிவபெருமானுக்கு அபிஷேகம் பூஜை செய்கிறார்கள். அன்று இரவு 11 மணிக்கு மேல் 12 மணிக்குள் வட திசையில் முதலில் மூன்றடி உயரத்தில் ஜோதி தெரிகிறது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் அதிகமாகி 6 அடி, 9 அடி, 12 அடி என்று 18 அடி உயரம்வரை அகன்று, விரிந்து விசுவ ரூபமெடுத்து பின் மறைந்து விடுகிறது. "அரோ கரா! ஜோதிஸ்வரூபனே! அக்னியாய் நிற்பவனே! நம சிவாய! வில்வநாதீஸ்வரா! என்றெல்லாம் மக்கள் மெய்மறந்து கூக்குரலி டுகிறார்கள். இந்த அதிசயம் பறைசாற்றப்படாமல் இன்றும் தொடர்கிறது.

சித்ரகுப்த பூஜை

(குறிப்பு: முதலில் பூஜைக்கு வேண்டிய பொருட்கள் யாவையும் முன்னமே எடுத்து வைத்துக்கொண்டு பூஜை ஆரம்பிக்க வேண்டும். மஞ்சள் பொடியினால் செய்த பிள்ளையார், புஷ்பம், அக்ஷதை, பஞ்சபாத்திரத்தில் ஜலம், கிண்ணம், வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் இதர சக்திக்கேற்ப நிவேதனப் பொருட்கள் விளக்கு, திரி, வத்திப்பெட்டி, ஊதுபத்தி, கற்பூரம், சந்தனம், குங்குமம், 2 தாம்பாளம் அல்லது தட்டு, விளக்கு வைக்க பலகை அல்லது ஒரு சிறுநுனி இலை, மணி, புஷ்ப மாலை, விளக்கை அலங்கரிக்க மாலை, பால், தானத்துக்கு வேண்டியவை ஒரு முறம் அல்லது ஒரு தட்டு, பக்ஷணங்கள், ஒரு நோட்டு புத்தகம், பென்ஸில் அல்லது ஒரு பால்பென், கொஞ்சம் பால் முதலியவை சக்திக்கேற்ப தயாராக வைத்துக் கொள்ளவும். பிறகு பூஜை ஆரம்பிக்க வேண்டும்.

பூஜாரம்பம்

(முதலில் ஆசமனம் செய்து விளக்கேற்றி கையில் புஷ்பம், அக்ஷதை எடுத்துக்கொண்டு, முதலில்

கணபதி வந்தனம்

சு'க்லாம்பரதரம் விஷ்ணும் ச'சி'வர்ணம் சதுர்புஜம் |
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சா'ந்தயே ||

ப்ராணாயாமம்

ஓம் பூ:–ஓம் புவ:–ஓகும் ஸுவ:–ஓம் மஹ:–ஓம் ஜன:–ஓம் தப:– ஓம் ஸத்யம்–ஓம் தத்ஸவிதுர் வரேண்யம்–பர்கோதேவஸ்ய தீமஹி–தியோயோ ந: ப்ரசோதயாத் – ஓமாப:–ஜ்யோதீரஸ: –அம்ருதம் ப்ரஹ்ம – பூர்புவஸ்ஸுவரோம்.

ஸங்கல்பம்

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீ பரமேச்'வர ப்ரீத்யர்த்தம், கரிஷ்ய மாணஸ்ய கர்மண: நிர்விக்னேன பரிஸமாப்த்யர்த்தம் ஆதௌ விக்னேச்'வர பூஜாம் கரிஷ்யே |

மணி அடிக்க

ஆகமார்த்தம் து தேவானாம் கமநார்த்தம் து ரக்ஷஸாம் |
கண்டாரவம் கரோம்யாதௌ தேவதாஹ்வான லாஞ்சனம் ||

விக்னேச்வர பூஜை

(செய்துவைத்த மஞ்சள் பிள்ளையாரை பூஜிக்க கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்துக்கொண்டு)

ஓம் கணானாம் த்வா கணபதிகும் ஹவாமஹே
கவிம் கவீநாம் உபமச்'ரவஸ்தமம் |
ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத
ஆந: ச்'ருண்வந்நூதிபிஸ் ஸீத ஸாதனம் ||

அஸ்மின் ஹரித்ராபிம்பே ஸுமுகம் ஸ்ரீ விக்னேச்'வரம் த்யாயாமி
(புஷ்பம் அக்ஷதை போடவும்.)

ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம : ஆஸனம் ஸமர்ப்பயாமி (அக்ஷதை போடவும்.)
ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம : அர்க்யம் ஸமர்ப்பயாமி
(ஒரு உத்திரணி ஜலத்தை கிண்ணத்தில் விடவும்.)
ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம : பாத்யம் ஸமர்ப்பயாமி
(சிறிதளவு ஜலம் கிண்ணத்தில் விடவும்.)
ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம : ஆசமனீயம் ஸமர்ப்பயாமி (ஜலம் விடவும்.)
ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம : ஔபசாரிக ஸ்னானம் ஸமர்ப்பயாமி
(உத்திரணியில் ஜலம் எடுத்து பிள்ளையார் மீது தெளிக்கவும்.)
ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம :
ஸ்னானானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி(கிண்ணத்தில் ஜலம் விடவும்.)
ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம: வஸ்த்ரார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி
(அக்ஷதை போடவும்.)

ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம:
யக்ஞோபவீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி (அக்ஷதை போடவும்.)
ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம: கந்தான் தாரயாமி (சந்தனம் இடவும்.)
ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம:
கந்தஸ்யோபரி ஹரித்ராகுங்குமம் ஸமர்ப்பயாமி (குங்குமம் இடவும்.)
ஓம் ஸ்ரீமஹா கணபதயே நம:
அலங்கரணார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி (அக்ஷதை போடவும்.)

புஷ்பை: பூஜயாமி

(புஷ்பம், அக்ஷதையால் மஞ்சள் பிள்ளையாரை பூஜை செய்யவும்.)

ஓம்	ஸுமுகாய	நம:	ஓம்	தூமகேதவே	நம:
ஓம்	ஏகதந்தாய	நம:	ஓம்	கணாத்யக்ஷாய	நம:
ஓம்	கபிலாய	நம:	ஓம்	பாலசந்த்ராய	நம:
ஓம்	கஜகர்ணகாய	நம:	ஓம்	கஜானனாய	நம:
ஓம்	லம்போதராய	நம:	ஓம்	வக்ரதுண்டாய	நம:
ஓம்	விகடாய	நம:	ஓம்	சூ’ர்ப்ப கர்ணாய	நம:
ஓம்	விக்னராஜய	நம:	ஓம்	ஹேரம்பாய	நம:
ஓம்	கணாதிபாய	நம:	ஓம்	ஸ்கந்த பூர்வஜாய	நம:

ஓம் ஸ்ரீ மஹாகணாதிபதயே நம: நாநாவித பத்ர பரிமள புஷ்பாணி ஸமர்ப்பயாமி (புஷ்பங்கள் போடவும்.)
தூபார்த்தம், தீபார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி. (அக்ஷதை போடவும்.)
(வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் உடைத்து இவைகளை நிவேதனம் செய்யவும்.)

நிவேதன மந்த்ரம்:

ஓம் பூர்புவஸ்ஸுவ: (ஜலத்தால் நிவேதனப் பொருட்களை சுற்றி) தத்ஸவிதுர்வ ரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி, தியோ யோ ந: ப்ரசோதயாத் என்று சொல்லி நிவேதனப்பொருள் மேல் ஜலத்தை தெளிக்கவும்.

தேவஸவித. ப்ரஸுவ | நிவேதனப்பொருள்களை சுற்றி ஜலம் விடவும். ஸத்யம் த்வர்த்தேன பரிஷிஞ்சாமி முன்போல் நிவேதனப் பொருள்களை சுற்றி ஜலம் விடவும்.

அம்ருதோபஸ்தரணமஸி என்று கூறி கிண்ணத்தில் ஜலம் விடவும். ஓம் ப்ராணாய ஸ்வாஹா, ஓம் அபானாய ஸ்வாஹா, ஓம் வ்யானாய ஸ்வாஹா, ஓம் உதானாய ஸ்வாஹா, ஓம் ஸமானாய ஸ்வாஹா, ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா. ஓம் ஸ்ரீ மஹா கணபதயே நம: நாளிகேர கண்டத்வயம், கதளீபலம் ஸர்வம் மஹாநைவேத்யம் நிவேதயாமி என்று கூறி அக்ஷதை எடுத்து நிவேதனப்பொருள்களை சுற்றி மஞ்சள் பிள்ளையாரிடம் சேர்க்கவும்.

மத்யே மத்யே அம்ருத பானீயம் ஸமர்ப்பயாமி கிண்ணத்தில் ஜலம் விடவும்.
அம்ருதாபிதாநமஸி உத்தராபோச'நம் ஸமர்ப்பயாமி ''
பூகிபலஸமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுதம் கர்ப்பூர சூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரகிக்ருஹ்யதாம் தாம்பூலம் ஸமர்ப்பயாமி. உத்தரணி யால் தீர்த்தம் எடுத்துத் தாம்பூலத்தில் தெளித்து பிறகு புஷ்ப அக்ஷதை போடவும்.
நீராஜனம் ஸமர்ப்பயாமி கற்பூரம் காட்டி அக்ஷதை சேர்க்கவும்.
நீராஜநாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி கிண்ணத்தில் ஜலம் விடவும்.

பிரார்த்தனை

வக்ரதுண்ட மஹாகாய கோடி ஸூர்ய ஸமர்ப்ரப |
நிர்விக்னம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா ||என்று பிரார்த்தித்து, ஓம் ஸ்ரீ மஹாகணபதயே நம: அனந்தகோடி ப்ரதக்ஷண நமஸ்காரான் ஸமர்ப்பயாமி என்று கூறி பரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்யவும்.

சித்ராபௌர்ணமி விரதமும் சித்ரகுப்த பூஜையும்

கணபதி வந்தனம்

சு'க்லாம்பரதரம் விஷ்ணும் ச'சி'வர்ணம் சதுர்புஜம் |
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப ச'ாந்தயே ||

ப்ராணாயாமம்

ஓம் பூ:– ஓம் புவ:– ஓகும் ஸுவ:– ஓம் மஹ:– ஓம்ஜன:– ஓம்தப:– ஓம் ஸத்யம் – ஓம் தத்ஸவிதுர் வரேண்யம் – பர்க்கோ தேவஸ்ய தீமஹி – தியோ யோ ந: ப்ரசோதயாத் – ஓமாப:– ஜ்யோதீரஸ:– அம்ருதம் ப்ரஹ்ம – பூர்புவஸ்ஸுவரோம் (ஓம் ஓம் ஓம் என்று கூறி வலது கரத்தால் வலது காதை தொட்டு பிறகு புஷ்பம் அக்ஷதை கையில் வைத்து)

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷய த்வாரா ஸ்ரீ பரமேச்'வர ப்ரீத்யர்தம் – சு'பே சோ'பநே முஹூர்தே – ஆத்யப்ரஹ்மண: – த்வி தீய பரார்த்தே – ச்'வேதவராஹ கல்பே – வைவஸ்வத மன்வந்தரே – அஷ்டா விம்ச'தி தமே கலியுகே – ப்ரதமேபாதே – ஜம்பூ த்வீபே பாரத – வர்ஷே – பரத கண்டே – மேரோ: தக்ஷிணே பார்ச்'வே – ச'காப்தே – அஸ்மின் வர்த்த மானே வ்யாவஹாரிகே ப்ரபவாதீனாம் ஷஷ்ட்யா: ஸம்வத்ஸராணாம் மத்யே (அதாவது வருடம் பெயர் திதி, கிழமை, நக்ஷத்திரம் முதலியவை பஞ்சாங்கம்

பார்த்து தெரிந்து அதற்கேற்ப சொல்லவும்) நாமஸம்வத்ஸரே உத்தராயனே, வஸந்த ருதௌ, சைத்ர மாஸே, சு'க்லபக்ஷே, பௌர்ணமாஸ்யாம் சு'பதிதௌ, (கிழமையின் பெயர்) – வாஸரயுக்தாயாம் (நக்ஷத்திரப்பெயர்) – நக்ஷத்ர யுக்தாயாம் ஏவங்குண விசே'ஷண விசி'ஷ்டாயாம் அஸ்யாம் பௌர்ண மாஸ்யாம் சு'பதிதௌ மம ஸஹகுடும்பானாம் க்ஷேமஸ் தைர்ய வீர்ய விஜய ஆயுராரோக்ய ஐச்'வர்யாணாம் அபிவ்ருத்யர்த்தம், தர்மார்த்த காமமோக்ஷ சதுர்வித பல புருஷார்த்த ஸித்யர்த்தம், புத்ரபௌத்ரா பிவ்ருத்த்யர்த்தம், இஷ்ட காம்யார்த்த ஸித்யர்த்தம், மனோவாஞ்சாபல ஸித்த்யர்த்தம், ஸமஸ்த துரிதோப சா'ந்த்யர்த்தம், ஆதித்யாதிநவக்ரஹாணாம் ஆனுகூல்ய ஸித்யர்த்தம். தர்ம ராஜஸபாஸ்த்தித ஸ்ரீ சித்ரகுப்த ஸ்வாமி ப்ரீத்யர்த்தம், ரௌரவ – மஹா ரௌவ – ஆதி நரகபாதா நிவ்ருத்யர்த்தம், புண்யலோக ப்ராப்த்யர்த்தம், சித்ரா பௌர்ணமாஸ்யாம் சித்ரகுப்த பூஜாம் கரிஷ்யே; ததங்கம் கலச' பூஜாம் ச கரிஷ்யே என்று கூறி புஷ்பம் அக்ஷதையை வடக்கே போடவும்.

பிறகு சிறிது ஜலத்தால் கையை துடைத்துக்கொண்டு மஞ்சள் பிள்ளையாரை "விக்னேச்'வரம் யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி" என்று கூறி அக்ஷதை ஸமர்ப்பித்து, மஞ்சள் பிள்ளையாரை வடக்கே நகர்த்தி பிறகு ப்ரஸாதம் எடுத்துக் கொள்ள வேண்டும். மணி அடிக்கவும்

ஆகமார்த்தம் து தேவானாம் கமநார்த்தம் து ரக்ஷஸாம் |
குரு கண்டாரவம் தத்ர தேவதாஹ்வான லாஞ்சனம் ||

கலச பூஜை

(சந்தனம், குங்குமம், அக்ஷதை இவைகளால் தீர்த்த பாத்திரத்தை அலங்கரித்து வலது கையால் மூடிக்கொண்டு)

கலச'ஸ்ய முகே விஷ்ணு: கண்டே ருத்ர: ஸமாச்'ரித: |
மூலே தத்ர ஸ்திதோ ப்ரஹ்மா மத்யே மாத்ருகணா: ஸ்ம்ருதா: ||
குக்ஷௌது ஸாகரா: ஸர்வே ஸப்தத்வீபா வஸுந்தரா |
ருக்வேதோऽத யஜுர்வேத: ஸாமவேதோப்யதர்வண: ||
அங்கைச்'ச ஸஹிதா: ஸர்வே கலச'ாம்பு ஸமாச்'ரிதா: |
ஆயாந்து தேவ பூஜார்த்தம் துரிதக்ஷயகாரகா: ||
கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி |
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸந்நிதிம் குரு ||

(என்று ஜபித்து, கலச' தீர்த்தத்தை சிறிதளவு எடுத்து பூஜாத் திரவ்யங்களையும் ஸ்வாமியையும் (தீபத்தின் மேலும்) தன்னையும் ப்ரோக்ஷணம் செய்துக் கொண்டு படத்தையோ விளக்கையோ புஷ்பமாலைகளால் அலங்கரித்து ஷோடசோ'பசார பூஜை செய்யவும்.)

ஷோடசோ'பசார பூஜை

சித்ரகுப்தம் மஹாப்ராஜ்ஞும் மத்யஸ்த்தம் ஸர்வதேஹினாம் |
த்யாயாமி தர்மாதர்மஜ்ஞும் லேகிநீ பத்ர தாரிணம் ||
சித்ரகுப்தாய நம: அஸ்மிந் தீபே–சித்ரகுப்தம் த்யாயாமி
அக்ஷதை போடவும்.

ஆவாஹயாமி தேவ த்வாம் அந்தகஸ்ய ஸபாஸதம் |
காயஸ்த்தம் கருணாமூர்த்திம் கல்மஷக்னம் கலாவிதம் ||
சித்ரகுப்தாய நம: சித்ரகுப்தம் ஆவாஹயாமி அக்ஷதை போடவும்.

சித்ரகுப்த க்ருஹாணேதம் சிரம் மணி விநிர்மிதம் |
ஆஸநம் ஹேமரசிதம் சு'பாஸ்தரண ஸம்யுதம் ||
சித்ரகுப்தாய நம: ஆஸநம் ஸமர்ப்பயாமி அக்ஷதை போடவும்.

பாத்யம் க்ருஹாண ப்ரம்ஹன் பாபலேச' விவர்ஜித |
பாலிதாசே'ஷ புவநேச சித்ரகுப்த நமோஸ்து தே ||
சித்ரகுப்தாய நம: பாத்யம் ஸமர்ப்பயாமி. கிண்ணத்தில் ஜலம் விடவும்.

அர்க்யம் க்ருஹாண தேவேச' கந்தபுஷ்பாக்ஷதைர் யுதம் |
சித்ரகுப்த மஹாப்ராஜ்ஞ பாபம் வாரய மேऽகிலம் ||
சித்ரகுப்தாய நம: அர்க்யம் ஸமர்ப்பயாமி. கிண்ணத்தில் ஜலம் விடவும்.

க்ருஹாணாசமநம் தேவ கருணாரஸ ஸாகர |
த்ராஹி மாம் நரகாத் கோராத் தேஹி மே ஸுக்ருதம் பதம் ||
சித்ரகுப்தாய நம: ஆசமநீயம் ஸமர்ப்பயாமி. கிண்ணத்தில் ஜலம் விடவும்.

மதுபர்க்கம் க்ருஹாணேதம் மஹாபாப விநாச'ன |
மஹதாமபி பாபாநாம் விநாச'ம் கலய ப்ரபோ ||
சித்ரகுப்தாய நம: மதுபர்க்க ஸ்நானம் ஸமர்ப்பயாமி.
ஜலம் எடுத்து விளக்கில் ப்ரோஷிக்கவும்.

பஞ்சாம்ருதம் க்ருஹாணேதம் த்வம் சராசர வல்லப |
வஞ்சநாதி ஸமுத்பந்நம் பாபம் மே விநிவாரய ||
சித்ரகுப்தாய நம: பஞ்சாம்ருதம் ஸ்நானம் ஸமர்ப்பயாமி.
ஜலம் எடுத்து விளக்கில் ப்ரோக்ஷிக்கவும்.

நாநாநதீ ஸமாநீதம் நாநா தர்ம விசா'ரத |
ஸ்நாநம் க்ருஹ்யதாம் தோயம் ஸ்வச்சம் கந்தாதி ஸம்யுதம் ||
சித்ரகுப்தாய நம: ஸ்நாநம் ஸமர்ப்பயாமி . ஜலம் ப்ரோக்ஷிக்கவும்.

வஸ்த்ரயுக்மமிதம் தேவ ச'ஸ்த்ர ஹஸ்த க்ருஹாண மே |
ச'ாஸ்த்ர லங்கந ஸம்பூதம் பாபம் ஸர்வம் விநாசய ||
சித்ரகுப்தாய நம: வஸ்த்ரார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி

அக்ஷதை போடவும்.

உபவீதமிதம் தேவ கார்ப்பாஸ பரிகல்பிதம் |
க்ருதாந்தமித்ர க்ருஹ்ணீஷ்வ கவிஜம் கலுஷம் ஹர ||
சித்ரகுப்தாய நம: உபவீதார்க்கம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி

அக்ஷதை போடவும்.

கந்தம் க்ருஹாண ஸுரபிம் குரு பாபவிநாச'ன |
கதிம் தேஹி பராம் மஹ்யம் சித்ரகுப்த நமோஸ்துதே ||
சித்ரகுப்தாய நம: கந்தாந் தாரயாமி சந்தனம் இடவும்.
கந்தஸ்யோபரி ஹரித்ரா குங்குமம் ஸமர்ப்பயாமி.

அதன் மேல் குங்குமம் இடவும்.

பவித்ராணி ச புஷ்பாணி சித்ரகுப்த க்ருஹாண போ: |
கமலாதீநி ரம்யாணி விமலம் தேஹி மே பதம் ||
சித்ரகுப்தாய நம: நாநாவித பத்ரபரிமள புஷ்பாணி ஸமர்ப்பயாமி
புஷ்பங்கள் எடுத்து போடவும். பிறகு புஷ்பத்தாலோ அக்ஷதையாலோ அர்ச்சனை செய்யவும்.

அங்க பூஜை

பாபநாச'நாய	நம:	பாதௌ	பூஜயாமி	அக்ஷதை போடவும்.
கமலவர்ணாய	நம:	குல்பௌ	பூஜயாமி	,,
சித்ராய	நம:	ஜாநுநீ	பூஜயாமி	,,
சித்ரரூபாய	நம:	ஜங்கே	பூஜயாமி	,,
நதாபீஷ்டதாய	நம:	நாபிம்	பூஜயாமி	,,
வ்ருகோதராய	நம:	உதரம்	பூஜயாமி	,,
ப்ராஜ்ஞாய	நம:	ஹ்ருதயம்	பூஜயாமி	,,
காலாய	நம:	கண்டம்	பூஜயாமி	,,
பஹுரூபாய	நம:	பாஹூந்	பூஜயாமி	,,
அந்தக ஸசிவாய	நம:	அதரம்	பூஜயாமி	,,
மத்யஸ்தாய	நம:	முகம்	பூஜயாமி	,,
கருணாநிதயே	நம:	கர்ணௌ	பூஜயாமி	,,
பத்ம நேத்ராய	நம:	நேத்ராணி	பூஜயாமி	,,
நாநாரூபாய	நம:	நாஸிகாம்	பூஜயாமி	,,
லலிதாய	நம:	லலாடம்	பூஜயாமி	,,
சித்ரகுப்தாய	நம:	சி'ர:	பூஜயாமி	,,

ஸர்வேச்'வராய நம: ஸர்வாண்யங்காநி பூஜயாமி புஷ்பம் அக்ஷதை போடவும்.

அர்ச்சனை

(புஷ்பத்தாலோ, அக்ஷதையாலோ அர்ச்சனை செய்யவும்.)

ஓம்	யமாய	நம:	ஓம்	ஔதும்பராய	நம:
ஓம்	தர்மராஜாய	நம:	ஓம்	தத்நாய	நம:
ஓம்	ம்ருத்யவே	நம:	ஓம்	நீலாய	நம:
ஓம்	அந்தகாய	நம:	ஓம்	பரமேஷ்டினே	நம:
ஓம்	வைவஸ்வதாய	நம:	ஓம்	வ்ருகோதராய	நம:
ஓம்	காலாய	நம:	ஓம்	சித்ராய	நம:
ஓம்	ஸர்வபூதக்ஷயாய	நம:	ஓம்	சித்ரகுப்தாய	நம:

நாநாவித பத்ர பரிமள புஷ்பாணி ஸமர்ப்பயாமி

தூபம் க்ருஹாண தர்மஜ்ஞ குக்குல்வகரு ஸம்யுதம் |
பூதம் தேஹி பதம் தேவ தூதபாப நமோஸ்து தே ||

சித்ரகுப்தாய நம: தூபம் ஆக்ராபயாமி

ஊது பத்தியை காட்டி அக்ஷதை போடவும்.

ஸாஜ்யம் த்ரிவர்த்தி ஸம்யுக்தம் சா'ஸிதாகில விஷ்டப |
தீபம் க்ருஹாண தயயா தீனவத்ஸல தே நம: ||

சித்ரகுப்தாய நம: தீபம் ஸந்தர்ச'யாமி

தீபம் காட்டி அக்ஷதை போடவும்.

சித்ரான்னம் க்ருதஸாராபூப மோதகாஜ்ய ஸமன்விதம் |
சித்ரகுப்த க்ருஹாணேதம் நைவேத்யம் நிர்மலம் ப்ரபோ ||

சித்ரகுப்தாய நம: சா'ல்யந்தம், க்ருதகுள பாயஸம், மாஷாபூபம், குளாபூபம், நாரிகேளகண்ட த்வயம், கதளீபலம், ஸர்வம் மஹாநைவேத்யம் நிவேதயாமி – சிறிது ஜலத்தினால் நிவேதனப் பொருளை சுற்றி கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்து விளக்கில் சேர்க்கவும்.

மத்யே மத்யே அம்ருத பாநீயம் ஸமர்ப்பயாமி. கிண்ணத்தில் ஜலம் விடவும்.

நைவேத்யாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி. சிறிது ஜலம் விடவும்.

பூகிபல ஸமாயுக்தம் நாகவல்லீ தளைர் யுதம் |
கர்ப்பூர சூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் ||

சித்ரகுப்தாய நம: கற்பூர தாம்பூலம் ஸமர்ப்பயாமி.

வெற்றிலை பாக்கை ஜலத்தால் சுற்றி விளக்கில் அக்ஷதை சேர்க்கவும்.

நீராஜனம் க்ருஹாணேதம் கர்ப்பூரை: கலிதம் மயா |
நீதிமார்க சராநந்த நிர்மலாய நமோஸ்து தே ||

சித்ரகுப்தாய நம: கற்பூர நீராஜனம் தர்சயாமி

கற்பூரம் ஸ்வாமிக்கு காட்டவும். அக்ஷதை போடவும்.

நமஸ்தே சித்ரகுப்தாய தர்மராஜ ஸகாய ச |
லேகிநீ வ்ருத ஹஸ்தாய ஸாக்ஷிணே ஸர்வதேஹினாம் ||
சித்ரகுப்தாய நம: மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பயாமி. புஷ்பம் போடவும்.
நாநாரத்ன ஸமாயுக்தம் வஜ்ரநாள ஸமன்விதம் |
முக்தா கேஸர ஸம்யுக்தம் ஸ்வர்ணபுஷ்பம் ததாம்யஹம் ||
சித்ரகுப்தாய நம: ஸ்வர்ணபுஷ்பம் ஸமர்ப்பயாமி
காசு அல்லது தங்கபொருள் ஸமர்ப்பிக்கவும்.

ப்ரக்ருஷ்ட பாபநாச'ாய ப்ரக்ருஷ்ட பலஸித்தயே |
ப்ரதக்ஷிணம் கரோமி த்வாம் சித்ரகுப்த ப்ரஸீத மே ||
யமாய தர்மராஜாய ம்ருத்யவே சாந்தகாய ச |
வைவஸ்வதாய காலாய ஸர்வபூத க்ஷயாய ச ||
ஔதும்பராய தத்நாய நீலாய பரமேஷ்ட்டினே |
வ்ருகோதராய சித்ராய சித்ரகுப்தாய வை நம: ||
சித்ரகுப்தாய வைநமோ நம: அநந்தகோடி
ப்ரதக்ஷிண நமஸ்காரான் ஸமர்ப்பயாமி. பிரதக்ஷணம் நமஸ்காரம் செய்யவும்.
சித்ரகுப்த க்ருபாஸிந்தோ பாபம் ஸர்வம் வினாசய |
மா ச மே நரகா: ஸந்து த்வத்ப்ரஸாதாத் தயாநிதே ||
என்று மனமாற பிரார்த்தனை செய்துகொள்ளவும்.

அர்க்யப்ரதானம்

அத்ய பூர்வோக்த ஏவங்குண விசே'ஷண விசி'ஷ்டாயாம் அஸ்யாம் பௌர்ணமாஸ்யாம் சு'பதிதௌ சித்ரகுப்தபூஜாந்தே க்ஷீரார்க்ய ப்ரதாநம் உபாயந தாநம் கரிஷ்யே ||

சித்ரகுப்த நமஸ்தேஸ்து தர்மராஜ ஸபாபதே |
அர்க்யம் க்ருஹாண பகவன் ஸர்வலோக சி'வங்கர ||
ஓம் ஸ்ரீ சித்ரகுப்தாய நம: இதமர்க்யம், இதமர்க்யம், இதமர்க்யம்
பால் கலந்து ஜலம் 3 தடவை விடவும்.

வைவஸ்வத நமஸ்துப்யம் தர்மாதர்ம விதாயக |
இதமர்க்யம் ப்ரதாஸ்யாமி மம பாபம் விநாச'ய ||
வைவஸ்தாய நம: இதமர்க்யம், இதமர்க்யம், இதமர்க்யம்

ஸர்வலோகாதி கர்த்ரே ச ஸர்வப்ராணி ஹிதாய ச |
துப்யமர்க்யம் ப்ரதாஸ்யாமி க்ருஹாணேதம் சதுர்முக ||
ப்ரஹ்மணே நம: இதமர்க்யம், இதமர்க்யம், இதமர்க்யம்
பால் கலந்து ஜலம் 3 தடவை விடவும்.

அனேன அர்க்யப்ரதானேன பகவான் ஸர்வாத்மக:
ஸ்ரீ சித்ர குப்த: ப்ரீயதாம் ஓம் தத்ஸத்.

உபாயதன தானம்

பூஜை முடிந்ததும் உடனடியாக ஓர் ப்ரஹ்மச்சாரி அல்லது ஓர் அந்தணருக்கு சக்திக்கேற்ப தானம் கொடுக்கலாம். அப்படி முடியாவிட்டால் ஸங்கல்ப்பம் செய்து தத்தம் செய்து வைத்து அவர் வந்ததும் கொடுக்கலாம். தக்ஷிணை சேர்த்து கொடுக்கவும்.

சித்ரகுப்த ஸ்வரூபஸ்ய ப்ராஹ்மணஸ்ய இதமாஸனம் |
கந்தாதி ஸகலாராதனை: ஸுஅர்ச்சிதம்
ஹிரண்ய கர்ப்ப கர்ப்பஸ்த்தம் ஹேமபீஜம் விபாவஸோ: |
அனந்த புண்ய புலதம் அத: ச்'ாந்திம் ப்ரயச்ச மே |
இதம் உபாயநம் ஸதக்ஷிணாகம், ஸதாம்பூலம், சித்ரகுப்த ப்ரீதம் காமயமான: சித்ரகுப்த ஸ்வரூபாய ப்ராஹ்மணாய ஸம்ப்ரததே (என்று சொல்லி தரவும்) ஓம் தத்ஸத் நமம.

பிறகு அதே நாளோ மறுநாளோ விளக்கில் மறுபடியும் **சித்ரகுப்தாய நம: நாநாவித பத்ர பரிமள புஷ்பாணி ஸமர்ப்பயாமி** புஷ்பம் அக்ஷதை போட்டு **கதளீ பலம் நிவேதயாமி** என்று கூறி பழம் நிவேதனம் செய்து அக்ஷதை சேர்க்கவும். **தாம்பூலம் ஸம்ர்ப்பயாமி** தாம்பூலத்தை காட்டி அக்ஷதை போடவும்.
சித்ரகுப்தாய நம: கற்பூர நீராஜனம் ஸமர்ப்பயாமி கற்பூரம் காட்டி அக்ஷதை போடவும்.

பிறகு **சித்ரகுப்தமஹா ஸிந்தோ கருணாரஸஸாகர | நமோஸ்துதே மஹாபாக பூஜாம் க்ருஹ்ணீஷ்வ தயாநிதே** என்று ப்ராத்தித்து,

யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி – என்று சொல்லி படத்தை, விளக்கை, கலசத்தை நகர்த்தவும்.

பிறகு சிறிதளவு ஜலம் கையில் எடுத்து **"காயேனவாசா மனஸேந்திரியைர்வா புத்யாத்மனா வா ப்ரக்ருதே: ஸ்வபாவாத் கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்ப்பயாமி"**– என்று கூறி ஜலத்தை கீழே விடவும்.

பிறகு கிண்ணத்தில் இருக்கும் ஜலத்தை தீர்த்தமாக தானும் உட்கொண்டு பிறருக்கும் கொடுக்கலாம். தீர்த்தம் ஸேவிக்க **"அகால ம்ருத்யுஹரணம் ஸர்வவ்யாதி நிவாரணம், ஸமஸ்தபாபக்ஷயகரம்** ஸ்ரீ சித்ரகுப்த பாதோதகம் சுபகரம் சுபம். பிறகு விளக்கை வடக்கே நகர்த்தி பூ, ப்ரஸாதம் தானும் உட்கொண்டு வினியோகமும் செய்யலாம்.

ஸ்ரீ சித்ரகுப்த பூஜை முற்றிற்று.
எங்கும் மங்களம் பொங்கட்டும்.

ISBN No. 81-7950-174-4

SRI CHITRAGUPTA POOJAI

(TAMIL)

GIRI TRADING AGENCY PRIVATE LIMITED

CHENNAI

Mylapore	©	(044) 2464 0376, 2494 2530
Nanganallur	©	(044) 2231 1735

MUMBAI

Matunga	©	(022) 2414 1344, 2414 3140
Goregaon	©	(022) 2876 7298
Nerul	©	(022) 3952 2491
Dombivili	©	(0251) 244 9585, 286 1890
COIMBATORE	©	(0422) 254 1523 (R.S. Puram)
SECUNDERABAD	©	(040) 2750 3046 (Skandagiri)
KANCHIPURAM	©	(04112)224415

Chennai Email id : giritrading@vsnl.com
Mumbai Email id : giritradingagency@vsnl.com
Website : www.giritrading.com

5th Reprint, June 2005 Price Rs. 6.00